# கலைஞரும் நானும் 30

"கலைஞர் யாரோடும் ஒப்பிட முடியாத தனித்துவம் வாய்ந்த தலைவர். அனைத்து சமூக மக்களுக்கும் அரசியல் பிரதிநிதித்துவம் வேண்டும் என நினைத்தவர். எங்கள் வளர்ச்சியிலும் அவரது பங்கு உள்ளது" என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன்.

■ ஈ.ஆர்.ஈஸ்வரன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி

## "அந்த நன்றி எங்களுக்கு எப்போதும் இருக்கும்!"



"ஒரு தலைவர் எப்படி அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதற்கு கலைஞர் சிறந்த உதாரணம். எங்கள் சமூகத்துக்கு கலைஞர் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வழங்கினாலும், நாங்கள் தனிக் கட்சியாக, அமைப்புகளாக எழுந்த போது அரவணைத்தவரும் கலைஞர்தான்.

சில சந்தர்ப்பங்களில் கலைஞரைச் சந்தித்திருந்தாலும் நாங்கள் அரசியல் இயக்கமாக வளர்ந்த பின்னர்தான் கலைஞருடன் நெருக்கமாக பேசும் வாய்ப்பு அமைந்தது. அரசியல் இயக்கம் தொடங்கிய நேரத்தில், 2009 ஆம் ஆண்டில் எங்களை அழைத்து வாழ்த்தினார்.

### உரையாடலுக்கான நெகிழ்வுத்தன்மை

அவரை சந்திக்கச் சென்றபோது முதல் சந்திப்பிலேயே கலகலப்பை உருவாக்கினார். அவரது நகைச்சுவையோடு கலந்த அறிவுக் கூர்மை இப்போது நினைத்தாலும் வியக்க வைக்கும். "கவுண்டர்கள் எல்லாம் இவ்வளவு நாளாக அமைதியாகத்தானே இருந்தீங்க இப்போது திடீரென 'கவுன்ட்டர் (COUNTER) கொடுக்க ஆரம்பிச்சிட்டீங்க" என நட்போடு கூறியதும் அந்த இடமே கலகலப்பாக மாறியது.

சந்திக்க வருபவர்களுக்கு இயல்பான உரையாடலுக்கு அது மாதிரியான நெகிழ்வுத் தன்மைகளே தோதாக இருக்கும். ஒரு பெரிய தலைவரே அந்த இடத்தை உருவாக்கித் தரும்போது அந்தத் தலைவனின் ஆளுமையை உணர முடியும். இப்படியான நம்பிக்கையைக் கொடுத்தவர் கலைஞர். அந்தக் கூட்டத்தில் மிக இயல்பாக நாங்கள் கலைஞருடன் உரையாடினோம்.

### எல்லா கட்சித் தொண்டருக்கும் மரியாதை

எந்தக் கட்சி தமிழ்நாட்டில் அதிகாரத்தில் இருந்தாலும் அவர் உருவாக்கிய அடித்தளத்தில் இருந்துதான் ஆட்சி செய்ய முடியும். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கொங்கு மக்களைச் சேர்த்து இடஒதுக்கீடு பெற வழிவகுத்தவர் கலைஞர். அந்த நன்றி எங்களுக்கு எப்போதும் இருக்கும்.

கோவை செழியன் காலத்தில் கொங்கு சமுதாயத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் இருந்தது. கலைஞரின் நெருங்கிய நண்பராக செழியன் இருந்தார். அதன் பின்னர் ஒரு நீண்ட இடைவெளி. அந்த இடைவெளியைத் தகர்த்தவர் கலைஞர். 2011 ஆம் ஆண்டில் எங்களை அழைத்து கூட்டணியில் சேர்த்து இடங்களை ஒதுக்கினார்.

2011 தேர்தல் பிரச்சாரப் பயணத்தின் போது கோவையில் இருந்து ஈரோடு செல்கிறார். வழியில், கருமத்தம்பட்டியில் முன்னறிவிப்பு இல்லாமல் கூட்டம் கூடி, கலைஞருக்கு வரவேற்பு அளிக்க முடிவு செய்தோம். அதுபோலவே கலைஞரின் வாகனத்தை நிறுத்தினோம். அப்போது வாகனத்தில் இருந்த அமைச்சர் முத்துசாமி அவர்கள், தலைவருக்கு வணக்கம் செய்வதோடு நிறுத்திக் கொள்ளுங்கள் என்றார். அப்போது என்னுடன் இருந்த நிர்வாகி ஒருவர், கையில் மைக்கை வைத்துக் கொண்டு, "மக்கள் உங்களை பேசச் சொல்கிறார்கள்" என திடீர் கோரிக்கை வைத்தார். கலைஞர் சற்றும் தாமதிக்காமல் மைக்கை வாங்கி 15 நிமிடங்களுக்கு மேல் பேசினார். தி.மு.க.வின் தொண்டர்களை மட்டுமல்ல, எந்தக் கட்சித் தொண்டர்களையும் மதிக்கக் கூடியவர் அவர்.

### தலைவருக்குரிய அடையாளம்

2016 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. அப்போது கூட்டணி அமைக்க தற்போதைய முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அதை முடித்துவிட்டு தலைவர் கலைஞரைச் சந்திப்பதற்காக கோபாலபுரம் சென்றோம். அப்போது உடல்நலம் காரணமாக அவர் ஓய்வில் இருந்த நேரம், பேசுவதும் குறைந்திருந்தது. என்னைப் பார்த்ததும் "என்ன ஈஸ்வரன், மீண்டும் வந்து விட்டீர்களா" எனப் பாசத்துடன் கேட்டார். அந்தச் சூழலிலும் என்னை ஞாபகம் வைத்து பெயர் சொல்லி அழைத்துப் பேசியது எனக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

இந்த நிகழ்வில் எனக்கு இரண்டு விஷயங்கள் ஆச்சரியம் அளித்தன. ஒன்று, ஒரு விஷயத்தில் முடிவே எடுத்தாலும் கட்சித் தலைவர்தான் அறிவிக்க வேண்டுமென தி.மு.க.வில் உள்ள கட்டுப்பாடு. அந்த கட்டுப்பாட்டினை உருவாக்கியது கலைஞர். இரண்டாவதாக, கலைஞர் எனது பெயரை ஞாபகம் வைத்து அழைத்தது. ஏனென்றால் இடைப்பட்டக் காலத்தில் அவருடன் நான் தொடர்பில் இல்லை. தவிர நெருங்கிப் பழகுவதற்கான எந்தச் சந்தர்ப்பமும் அமைந்ததில்லை. அப்படியான நிலையிலும் எனது பெயரைச் சொல்லி அழைத்தது வியப்பாக இருந்தது.

**சின்னக் கட்சியாக இருந்தாலும் அதனுடைய நடவடிக்கைகளை, அதனுடைய பொறுப்பாளர்களை கலைஞர் கூர்ந்து கவனிப்பார். நம்முடன் பேசாமல் இருந்தாலும் நம்மை கவனித்து வருகிறார் என்பதே மகிழ்ச்சி கொடுக்கும்.**

தமிழ்நாட்டில் சின்னக் கட்சியாக இருந்தாலும் அதனுடைய நடவடிக்கைகளை, அதனுடைய பொறுப்பாளர்களை கலைஞர் கூர்ந்து கவனித்து வந்துள்ளார் என்பதற்கு அந்த நிகழ்வை நினைத்துப் பார்ப்பேன். நம்முடன் பேசாமல் இருந்தாலும் நம்மை கவனித்து வருகிறார் என்பது எனக்கு அப்போது மகிழ்ச்சி கொடுத்தது.

மாற்றுக் கட்சியைச் சேர்ந்த என்னையே ஞாபகம் வைத்துப் பெயர் சொல்லி அழைக்கும் போது, தி.மு.க. தொண்டர்களைப் பெயர் சொல்லி அழைக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். இவையெல்லாம் தான் ஒரு தலைவனுக்குரிய அடையாளமாக உள்ளன.

### வள்ளிக் கும்மிக்கு மேடை



தமிழ்நாட்டின் கலைப் பண்பாடுகளை வளர்ப்பதில் கலைஞர் கொண்டிருந்த அக்கறையை கோவை செம்மொழி மாநாட்டின் மூலம் நான் நேரடியாக அறிந்தேன்.

கொங்கு வட்டாரப் பகுதிகளில் இப்போது மிக பிரபலமாக வளர்ந்து வருகிறது வள்ளிக் கும்மி ஆட்டம். அந்த ஆட்ட த்துக்கு செம்மொழி மாநாடு மூலம் உயிர் கொடுத்தவர் கலைஞர். அப்போதுதான் வள்ளிக் கும்மியை வளர்க்க சிறிய அளவில் கலைக்குழு தொடங்கி இருந்தோம். செம்மொழி மாநாட்டில் தமிழ்நாட்டின் பல்வேறு கலைகளையும் மேடை ஏற்றுகையில் வள்ளிக் கும்மியையும் சேர்த்தார் கலைஞர். இதன்மூலம் உலகம் முழுவதும் கவனிக்கப்பட்டது.

எங்கேயோ ஒரு கிராமத்தில் நடந்து கொண்டிருந்த வள்ளிக் கும்மி ஆட்டம் இன்றைக்கு கொங்கு வட்டாரத்தில் மிகப்பெரிய கலை வடிவமாக எழுந்து நிற்கிறது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பயிற்சி எடுத்துள்ளனர்.


இப்படி ஒரு கலைக்கு உயிர் கொடுத்து உலக அரங்கில் கொண்டு வந்து நிறுத்தியவர் கலைஞர்.

நூற்றாண்டு கண்ட அந்தத் தலைவரோடு, சாணக்கியரோடு நானும் பழகி இருக்கிறேன் என்பதே மகிழ்ச்சியான உணர்வைத் தரக்கூடியது. அவரது வாழ்க்கை வரலாறு வருங்காலத் தலைமுறைக்குப் பாடம். அதில் இடம்பெறுவோம் என்பதே பெருமைதான்.

...பகிர்வார்கள்

---

## வாசிப்புக்கு நகர்த்தும் வையம்!



சமூக நீதி அரசியலை உயர்த்திப் பிடிக்கும் கலைச் செயல்பாடுகளில் புதிய வரவாக வந்துகொண்டிருக்கிறது 'வையம்' திங்களிதழ். சமதர்ம, சமூக நீதிக் கண்ணோட்டத்தில் அமைந்த காத்திரமான கட்டுரைகள், சமகால அரசியல் சூழலின் தேவையாக உள்ளன. அந்த இடைவெளியைக் கண்டு, தமிழில் தொடர்ச்சியாக இயங்கிவரும் முக்கிய ஆளுமைகளின் பங்கேற்பில் வையம் இதழ் வெளியாகிறது.

வள்ளுவர், பெரியார், அம்பேத்கர், கலைஞர், என இந்த இதழ் உயர்த்திப் பிடிக்கும் அரசியல் வெளிப்படையானது. மணிப்பூர் வன்முறையின் பின்னணி, ஈரோடும் வடலூரும் சந்திக்கும் புள்ளி, மக்களுக்கு இன்றைய தேவை, உரிமை சார்ந்த சேவைகளா? வாழ்வியல் சார்ந்த தேவைகளா? என, காலப் பொருத்தமான அழுத்தமான கட்டுரைகளை, இந்த இதழ் தாங்கி வருகிறது. திராவிடக் கருத்தியலைத் தாங்கி நிற்க, ஆழமான வாசிப்பை நோக்கி நகர்த்துகிறது வையம்.

## :ப்ளாஷ்பேக்



### இருவருக்கும் நடுவில்!



பேபி சந்திரன்

நான் 1962-ஆம் ஆண்டு, கழகம் நடத்திய விலைவாசிக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்று மூன்று மாதம் சிறை சென்றேன். அதற்கு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா, வாளும் வெள்ளிக் கேடயமும் பரிசாக வழங்கினார். புகைப்படக் கலைஞராக இருந்த நான், அந்த முழு நிகழ்வையும் புகைப்படம் எடுத்தேன். நிகழ்ச்சி முடிந்ததும், தலைவர் கலைஞருடனும், லட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரனுடனும் புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்பினேன். என்னை இருவருக்கும் நடுவில் நிற்கவைத்து, புகைப்படம் எடுத்துக்கொள்ள அனுமதியும் கொடுத்தார்கள். இன்றைக்கும் என் வீட்டை அலங்கரிக்கும் புகைப்படமாக இது விளங்குகிறது.

**–எஸ்.பேபி சந்திரன், ஜெய்ஹிந்த்புரம், மதுரை.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### விசித்திர வழக்கு!

**1978-ஆம் ஆண்டு, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியைக் கொலை செய்ய முயன்றதாக கலைஞர் உள்பட கழகத்தினர் மீது வழக்குப் போடப்பட்டது. அந்த வழக்கில், இந்திரா காந்தி அவர்களும் சாட்சியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். 1978-ஆம் ஆண்டு தொடரப்பட்ட அந்த வழக்கு 1994-ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இடையில் , இந்திரா காந்தி அவர்களுடன் கூட்டணி வைத்து, ஒரே காரில் பிரச்சாரம் செய்துள்ளனர். கலைஞர் முதலமைச்சராக இருந்துள்ளார். 94- ஆம் ஆண்டு அந்த வழக்கை, உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. ஆனாலும், அன்றைய அரசு உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்தது. அங்கும் வழக்கு தள்ளுபடி ஆனது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 201




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131